CC.No. 22 /2017 நாள் : 05.11.2025

PW 1- திரு.சேகர்

**சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப் பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1) நான் எனது முதல் விசாரணையில் சொல்லி உள்ள அனைத்தும் போலீசார் சொல்லி தான் சாட்சியாக சொல்லி உள்ளேனா என்றால் நடந்ததை சொன்னேன். நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை நான் கைப்பட எழுதவில்லை போலீசார் எழுதியதால் அதில் என்ன விவரம் எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக என்னையோ என் மனைவியையோ போலீசார் விசாரிக்கவில்லை என்றால் ஒரு முறை விசாரித்தார்கள் அதற்கு பின்னிட்டு விசாரிக்கவில்லை. எனது வீட்டில் இருந்து பணம் ரூ.4000/- காணாமல் போனதாக நான் புகார் கொடுத்திருந்தேன் அந்த பணம் எனக்கு நீதிமன்றத்தின் மூலம் மனு தாக்கல்செய்து பெற்றுக்கொண்டதால் நான் இந்த வழக்கில் சமரசம் ஆகிவிட்டேன். அதனால் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்க தேவையில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2025.11.05 17:51:42 +0500

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.